வகுப்பு : 8-ம் வகுப்பு

பாடம் : தமிழ்

## இயல் - 6

**I. சிறுவினா.**

**1. உழவுத்தொழில்பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?**

சேர மன்னரின் அகன்ற நிலப்பகுதியில் விதைகள் குறைவின்றி முளைவிடுக. முளைத்த அவ்விதைகள் செழிப்புடன் வளரத் தட்டுப்பாடின்றி மழை பொழிய வேண்டும்.

தகுந்த காலத்தில் மழை பொழிவதால் பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளர்ந்து, பால் முற்றிக் கதிர்களைத் தர வேண்டும்.

அக்கதிர்கள் அறுவடை செய்யப்பெற்று, ஏரினால் வளம் சிறக்கும் செல்வர்களின் களத்தில் வந்து நிறைய வேண்டும்.

அக்களத்தில் வந்து நிறைந்துள்ள நெற்போர், காவல் இன்றியே விளங்க வேண்டும்.

இவ்வாறு உழவுத்தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுகிறது.

**2. கோலம் கரையாத நிலையை மழைச்சோறு பாடல் எவ்வாறு விளக்குகிறது?**

வாளியில் மாவு கரைத்து வாசல் முழுவதும் கோலம் போட்டுவைத்தும் பெருமழை பெய்யவில்லை; கோலமும் கரையவில்லை.

பானையில் மாவு கரைத்துப் பாதையெல்லாம் கோலம் போட்டும் பெருமழை பெய்யவில்லை. அக்கோலமும் கரையவில்லை.

**2. மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.**

கல் இல்லாக் காட்டில் கடலைச்செடி போட்டு வைத்தோம். கடலைச் செடிதான் வாடியது. கனத்தமழை பெய்யவில்லை.

முள் இல்லாக் காட்டில் முருங்கைச்செடி நட்டு வைத்தோம். முருங்கைச் செடிதான் வாடியது. முத்துப் போன்ற மழை பெய்யவில்லை.

கருவேலங்க காட்டில் கனமழை பெய்யாததால் காட்டுமல்லி பூக்கவில்லை.

**3. மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?**

மழைச்சோறு எடுத்தபின் பேய்மழை பெய்தது.

ஊசி போலக் காலிறங்கி உலகமெங்கும் மழை பெய்தது.

சிட்டுப்போல மின்னி மின்னி, நாடு முழுவதும் செல்ல மழை பெய்தது.

**4. கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?**

கார்மேகக் கவிஞர் இயற்றிய கொங்கு மண்டலச் சதகம் என்னும் நூலில் வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனிமலை, மேற்கே வெள்ளிமலை, கிழக்கே மதிற்கரை என இந்நான்கு எல்லைகளுக்குட்பட்ட பகுதியாய்க் கொங்குமண்டலம் விளங்கியதாய்க் கூறப்படுகிறது.

இன்றைய நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களையும் சேலம், கரூர் மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாய்க் கொங்குமண்டலம் விளங்கியது என்பர்.

**5. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.**

கரூர் மாவட்டத்தில் நெல் சோளம், கேழ்வரகு, கம்பு, கரும்பு போன்றவை பயிரிடப்படுகின்றன.

கல்குவாரித் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன.

கைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர்பெற்ற மாவட்டமாய்க் கரூர் விளங்குகிறது.

தோல் பதனிடுதல், சாயமேற்றுதல், கற்சிற்ப வேலைகள் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன.

பேருந்துக் கட்டுமானத் தொழிலின் சிகரமாய் கரூர் விளங்குகிறது.

**6. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது இயல்பு புணர்ச்சி ஆகும்.

(எ.கா): தாய் + மொழி = தாய்மொழி.

இதில் இரு சொற்களிலும் எந்த மாற்றமும் நிகழவில்லை.

**7. மரக்கட்டில் - இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சியை விளக்குக.**

மரக்கட்டில் = மரம் + கட்டில்.

இங்குக் கெடுதல் விகாரத்தின்படி நிலைமொழி ஈற்றில் உள்ள மகரமெய் மறைந்தது. (மர + கட்டில்).

தோன்றல் விகாரத்தின்படி 'க்' என்னும் மெய்யெழுத்துத் தோன்றி (மர + க் + கட்டில்) மரக்கட்டில் என்றானது.

**II. நெடுவினா.**

**1. கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.**

உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தில் கொங்குநாடு சிறப்புற்று விளங்கியது.

கடல் வணிகத்தில் சேரநாடு சிறந்து விளங்கியது.

முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாய் விளங்கியது. இங்கிருந்துதான் மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானைத்தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன.

பொன், மென்மைமிக்க புடைவைகள், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன என்பதை

"மீனோடு நெற்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து
..........................................................
கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரைசேர்க்குது"

என்ற புறநானூற்றுப்பாடல் விளக்குகிறது.

சேர நாட்டில் உள்நாட்டு வணிகமும் நன்கு வளர்ச்சியுற்றிருந்தது. மக்கள் தத்தம் பொருள்களைத் தந்து தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றனர்.

நெல்லே விலையைக் கணக்கிட அடிப்படையாய் இருந்தது.

உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையனவாய் இருந்தன என்பதை,

"நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும்" - (அக.390)

என்னும் அகப்பாடல் மூலம் அறியலாம்.

**III. பின்வரும் மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. வாழையடி வாழையாக - ____________________
2. முதலைக்கண்ணீர் - ____________________
3. எடுப்பார் கைப்பிள்ளை - ____________________

Pinkz Public School
Next Generation School

**விடை**

1. வாழையடி வாழையாக - எங்கள் குடும்பத்தில் **வாழையடி வாழையாக** மளிகைக் கடை நடத்தி வருகிறோம்.

2. முதலைக்கண்ணீர் - குமரன் தன் தாயிடம், பள்ளிக்கூடம் செல்லாமல் இருப்பதற்கு, வயிற்றுவலி என்று கூறி **முதலைக் கண்ணீர்** வடித்தான்.

3. எடுப்பார் கைப்பிள்ளை - என் தம்பி **எடுப்பார் கைப்பிள்ளையாய்** மாறி விட்டதை எண்ணி வருந்தினேன்.

**IV. ஊர்களையும் அவற்றிசன் சிறப்புகளையும் அறிவோம்!**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ட் | டா | க | | | 2 மா | | | |
| ட் | | கை | லி | ல் | 3 ம | பு | | | |
| டு | | | | ம் | ழ | ப | ப் | லா | 4 ப |
| வ | 5 அ | ரி | வா | ள் | | ழ | 6 உ | | ஞ் |
| கை | | | கோ | | | ம் | | | சா |
| க | | 7 அ | ல் | வா | | | | | மி |
| ள் | | | 8 பா | | | டு | | | ர் |
| | | மை | ம் | பொ | டி | ட் | யா | லை | 9 த |
| கு | க் | று | 10 மு | | | 11 பூ | | | ம் |
| 12 க | ட | லை | மி | ட் | டா | ய் | | | |

Pinkz Public School
Next Generation School

**இடமிருந்து வலம்**

1. சிவகாசி - பட்டாசு

5. திருப்பாச்சி - அரிவாள்

7. திருநெல்வேலி - அல்வா

12. கோவில்பட்டி - கடலைமிட்டாய்

**வலமிருந்து இடம்**

3. மதுரை - மல்லிகை

4. பண்ருட்டி - பலாப்பழம்

9. தஞ்சாவூர் - தலையாட்டிப்பொம்மை

10. மணப்பாறை - முறுக்கு

**மேலிருந்து கீழ்**

1. காஞ்சிபுரம் - பட்டுவகைகள்

2. சேலம் - மாம்பழம்

3. பழனி - பஞ்சாமிர்தம்

**கீழிலிருந்து மேல்**

6. தூத்துக்குடி - உப்பு

8. ஸ்ரீவில்லிபுத்தூர் - பால்கோவா

11. திண்டுக்கல் - பூட்டு

V. கட்டுரை.

## கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.

**குறிப்புச் சட்டகம்.**

முன்னுரை, வேலைவாய்ப்பு, தொழில் வகைகள், பயன்கள், முடிவுரை.

### முன்னுரை

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"

என்றார், நாமக்கல் கவிஞர். நாம் தொழில் ஒன்றைக் கற்றுக்கொண்டால் வெளியே வேலை தேடி அலைய வேண்டிய அவசியமில்லை. நம் வீட்டிலேயே கைத்தொழிலைச் செய்து வருவாய் ஈட்டலாம்.

### வேலைவாய்ப்பு

இன்று படித்துவிட்டு வேலை கிடைக்காமல் திண்டாடுவோர் பலர் உள்ளனர். அவர்கள் அனைவரும் வேலை வாய்ப்பை மட்டுமே எதிர்பார்த்துக் காத்திருந்தால் ஏமாற்றமே கிட்டும். சொந்தமாய்த் தொழில் தொடங்க வேண்டும். வேலைவாய்ப்புக் கிடைக்கவிலலையே என்று வருந்தி நிற்காமல், தொழில் வாய்ப்பைக் பயன்படுத்திக் கொண்டு வீட்டிலேயே தொழில் செய்து வருவாய் பெற முடியும்.

### தொழில் வகைகள்

குறைவான முதலீட்டில் வீட்டில் இருந்தபடியே சொந்தமாய்த் தொழில் செய்து பொருளீட்டும் தொழிலைச் செய்வதற்குப் பயிற்சி பெறுதல் மிகவும் இன்றியமையாதது.

முறுகக்கு, அதிரசம் போன்ற தின்பண்டங்கள் செய்து விற்பனை செய்தல், பினாயில் தாயாரித்தல், மெழுகுவத்தி தயாரித்தல், தீக்குச்சி தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், தேனீ வளர்த்தல் போன்ற ஏராளமான கைத்தொழில்களைச் செய்து பொருளீட்டலாம்.

**பயன்கள்**

ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொண்டு நாம் தொழில் செய்யத் தொடங்கிவிட்டால் வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். சொந்தமாய்த் தொழில் செய்யத் தொடங்கினால் தன்னம்பிக்கையுடன் வாழ முடியும். தரமான முறையில் பொருள்களை உற்பத்தி செய்தால், நுகர்வோர் வீட்டிற்கே வந்து பொருள்களை வாங்கிச் செல்வர்.

**முடிவுரை**

"செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்.

என்னும் பாடலுக்கேற்ப, ஏதேனும் ஒரு கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொண்டு அதனை சிறப்பாய்ச் செய்தால் வேலை வாய்ப்புகளைப் பெருக்கலாம்.